Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    மார்கழி 07    (22 12 1991)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை: 307

## 23-ம் திகதி முதல் 29வரை; சூழல் சுகாதார வாரம்

சூழல் சுகாதாரம் பேணல் என்ற தலைப்பில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வைத்தியர்கள், பாடசாலை வட்ட சபை, தனியார் கல்விநிறுவனங்கள், மாதர் சங்கங்களும் பங்கு கொண்ட ஒரு கருத்தரங்கு நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் இளம்பரிதி, மக்கள் முன்னணி பிரமுகர் வே. பாலகுமாரன் தமிழ்வாணன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இனப் பிரச்சினைத் தீர்விற்கு 200க்கு மேற்பட்ட மகஜர்கள்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு இதுவரை இருநூறுக்கு மேற்பட்ட மகஜர்கள் கிடைத்துள்ளன. இவற்றில் எண்பது மகஜர்கள் தொடர்பான சுருக்கம் தெரிவுக்குழு அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவுக்குழுவின் தலைவரும் சுதந்திரக் கட்சி எம். பியுமான மங்கள முனசிங்கா தெரிவித்தார்.

வடமாகாணத்திலிருந்து பெருந்தொகையான மகஜர்கள் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் தமிழ்யுனை தனிக்குழுக்கள் சில கூட்டாகவும் சில தனித்தனியாகவும் தமது தீர்வுத் திட்டத்தை முன்வைத்துள்ளன; அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசும் தமது மகஜரைச் சமர்ப்பித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இதுவரை தமது யோசனைகளை முன்வைக்கவில்லை.

தெரிவுக்குழு எதிர்வரும் புதன்கிழமை மாலை பாராளுமன்ற கட்டடத்தில் கூடியது தெரிவுக்குழு மீண்டும் ஜனவரி 10 ஆம் திகதி கூடவுள்ளது.

## தொண்டாவிற்கு எதிர்ப்பு வலுக்கிறது சிங்கள பேரினவாதிகள் ஆத்திரம்

சிறிலங்கா பாராளுமன்றத்தில் இ. தொ. காவின் பலம் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்தும், இ. தொ. காவின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைத் தொடர்ந்தும் சிங்களப் பேரினவாத சக்திகளின் மத்தியில் திரு. தொண்டமானுக்கு எதிர்ப்பு அதிகரித்து வருவதாக பி.பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது.

ஐ. தே. கட்சியில் எட்டு அதிருப்தியாளர்கள் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டபோது தொண்டமானின் இ. தொ. காவிற்கு இரண்டு பாராளுமன்ற ஆசனங்கள் கிடைத்தன. இதன் மூலம் பாராளுமன்றத்தில் இ. தொ. காவின் பலம் ஐந்தாக உயர்ந்தது.

தொண்டமானின் இத் தீர்வுத் திட்டம் பற்றி தென்னிலங்கையில் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது. ஆனால் அமைச்சர் எஸ். தொண்டமானின் திட்டத்தின் மூலம் புலிகளின் கை ஓங்குவதை இந்தியா விரும்புமா என்பது சந்தேகம். ஏனெனில் விடுதலைப் புலிகளை இந்தியா தனது அரசியல் எதிரியாகக் கருதுகிறது என்று பி.பி.ஸி கருத்துத் தெரிவித்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மும்மொழியில் 'சார்க்' கீதம்

(கொழும்பு)

## அமைதியான அணிவகுப்பு சார்க் உச்சி மாநாடு

'சார்க்' நாடுகளின் தலைவர்களின் ஆறாவது உச்சி மாநாடு நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தெரிந்தெடுக்கப்பட்ட அழைப்பாளர்கள் மட்டுமே மாநாட்டு மண்டப வளவினுள் அனுமதிக்கப்பட்டனர். கொழும்பின் 30 பாடசாலைகளைச் சேர்ந்த 1200 மாணவர்கள், ஏழு நாடுகளின் கலாசார பாரம்பரியத்திற்கு ஏற்ப உடையணிந்து அணிவகுத்து நின்றனர்.

அணிவகுப்புமரியாதையை கடற்படை, விமானப்படை, பொலிஸ் படையினர் மேற்கொண்டனர்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான் முயற்சிக்கு 'சார்க்' பங்காற்ற முடியும் —நவாப் செரிப்

தென்னாசியப் பிராந்தியத்தை அணு ஆயுதமற்றதாக்கும் பாகிஸ்தானின் முயற்சிக்கு 'சார்க்' அமைப்பு முக்கிய பங்கு வகிக்க முடியும் என பாகிஸ்தான் பிரதமர் நவாப் செரிப் தெரிவித்தார். நேற்று நடைபெற்ற 'சார்க்' உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர் தென்னாசியப் பிராந்தியத்தை அணுவாயுதமற்றதாக்கும் முயற்சிக்கு ஐ. நா பாதுகாப்பு சபையின் ஆதரவு கிடைத்திருப்பதை குறிப்பிட்டு இம் முயற்சிக்கு சார்க் அமைப்பு முக்கிய பங்கு வகிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். படிப்படியாக ஆபத்தை விளைவிக்கும் ஆயுதங்களையும் இப்பிராந்தியத்தில் களைய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

## ஒத்துழைப்பு; புரிந்துணர்வு சார்க் தலைவர்கள் உடன்பாடு

சார்க் நாடுகளுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்புணர்வே டு தங்களது மக்களினது நலனுக்காகப் பிராந்திய ஒத்துழைப்பைப் பேணி வளர்க்க சார்க் தலைவர்கள் உடன்பட்டுள்ளனர்.

நேற்று 6-வது சார்க் உச்சி மாநாட்டின் முடிவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரகடனத்தில், சர்வதேசப் பொருளாதாரத்தின் தாக்கம் எந்த அளவு ஒவ்வொரு நாடுகளையும் சார்ந்திருக்கிறது மற்றும் வளர்ந்த வளரும் நாடுகளுக்கிடையே பேச்சு வார்த்தைகளைப் புதுப்பிக்க வேண்டிய

மனித உரிமைகள் பற்றி கொழும்பு சார்க் பிரகடனம் குறிப்பிகையில் நடுநிலையநோக்குடனும், அரசியல் நோக்குடனும் இதைக் கருத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று தெரிவிக்கிறது.

பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளும் சமனாகப்

ஐ.தே. கட்சியில் எட்டு அதி ருப்தியாளர்கள் பாராளுமன் றத்தில் இருந்து வெளியேற் றப்பட்டதைத் தொடர்ந்து லைமையில் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது. ஆனால் அமைச்சர் எஸ். தொண்டமானின் திட்டத்தின்

## மண்ணெய் சந்தையில் நேற்றுமாய மறைவு

(சச்சமோபிடை)

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்ட மண்ணெண்ணெயின் உத்தர வாத விலைத்திட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது. உத்தேச உத்தரவாத விலை லீற்றர் 38 ரூபாவாகும். ஆனால் அது நடைமுறைக்கு வரமுன்னரே இரவோடு இர வாக மண்ணெண்ணெய்மாய மாக மறைந்துவிட்டது. கல்வி யங்காடு, முத்திரைச் சந்தை, திருநெல்வேலி ஆகிய இடங்க ளிலும் குறிப்பாக யாழ் நகரி லும் இவற்றை காண்பதற் காண முடியாதநிலை ஏற்பட் டுள்ளது. (43)

## 'சார்க்' கீதம்

(கொழும்பு)

'சார்க்' நாடுகளின் 6 ஆவது உச்சிமாநாடு தொடர்பாக தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் 'சார்க்' கீதம் நேற்று ஒலிபரப்பப்பட்டது.

மாநாட்டு மண்டபத்தில் காணப்பட்ட பதாகைகளிலும் "சார்க் 1991" என மும் மொழிகளிலும் எழுதப்பட்டி ருந்தது.

மாநாட்டு மேடையில் புத் தர் சிலையொன்று அலங்கா ரமாக வைக்கப்பட்டிருந்தது.

டுள்ளனர்

நேற்று 6-வது சார்க் உச்சி

## 7ஆவது சார்க் டாக்காவில்

7-வது சார்க் உச்சி மா நாடு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் 1992 இல் நடை பெறும் இந்த முடிவு நேற்றுக் கொழும்பு சார்க் மாநாட் டில் எடுக்கப்பட்டது.

முதலாவது சார்க் உச்சி மாநாடு 1985 இல் டாக் காவில் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது

வளர்ந்து வரும் நாடுகளுக் கிடையே பேச்சு வார்த்தைக ளைப் புதுப்பிக்க வேண்டிய தன் தேவை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட் டுள்ளது

தெரிவிக்கிறது.

பிராந்தியத்திலுள்ள அனை த்து நாடுகளும் சமனாகப் பலன் பெறும் வகையில் படிப் படியாக அந்தப் பிராந்தியத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் பற்றிய பேச்சு

## புதிய ஆதிக்கத்திற்கான போலியான அறக்கோட்பாடு

### - பிரேமதாசா

வெளிநாடுகள் அளித்து வரும் உதவிக்கு நாம் நன்றி தெரிவிக் கக் கடமைப்பட்டுள்ளோமென் றாலும் உதவிக்கும் மனித உரி மைகளைப் பேணுவதற்கும் இடையில் தொடர்பு ஏற்படுத் துவது கவலை தரும் போக் காக இருக்கிறது என்று சார்க் அமைப்பின் புதிய தலைவர் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா குறிப்பிட்டார்.

இத்தகைய போலித்தன மான அறக்கோட்பாடுகளைச் சொல்லிச் சிலர் புதிய குடி பேற்ற ஆதிக்கம் செலுத்த முயல்வது பற்றி பிரேமதாசா எச்சரித்தார்.

மேலும் அவர் பேசுகையில், பொருளாதார கூட்டுறவு, அர சியல் ஒத்துழைப்பு, வர்த்தக ஒ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுப்பாட்டு விலை மண்ணெய்க்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய்க்கு யாழ். செயலகத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலை சில்லறை வியாபாரிகளுக்கு பொருந் தாது எனவும் அவர்கள் தாம் கொள்விலைக்கு ஏற்ப விற்க லாம்எனவும் யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் பதிமநா தன் அறிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்ட உத்தரவு பெற்ற மண்ணெண்ணெய் விநி யோகத்தர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று யாழ் செயலகத்தில் நடை பெற்றதும் அதில் மண்ணெ

(4ஆம் பக்கம் பார்க்க)

## நகருக்கு வெளியே கல்வி அலுவலகம்

(வவுனியா)

வவுனியா நகருக்குவெளியே கல்வி அலுவலகம் ஒன்றைச் செயற்படவைப்பதற்கு நட வடிக்கை மேற்கொள்ளப்படு கிறது.

கிராமப்புற மாணவர்களி கல்வி வளர்ச்சியை முன்னி ட்டே இது மேற்கொள்ளப்படு வதாகத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டு ஆரம்பப் பகுதியில் கோட்ட அலுவலகம் ஒன்று ஓமந்தைப் பிரதேசத் தில் திறக்கப்படலாம் என்று கூறப்பட்டது.

கிராமப் புறங்களிலிருந்து சென்று நகரப் பகுதிப் பாட சாலைகளில் நியமனம் பெற் றிருந்த ஆசிரியர்கள் மீள கிரா மப்புறப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

## பன்றி தாக்கி வயோதிபர் படுகாயம்

பன்றியின் தாக்குதலுக்கு இலக்கான வயோதிபர் தனது இடது கையை இழந்த சம்ப வம் ஒன்று நேற்று வரணி பகுதியில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது நேற்றுக் காலை பத்து மணியளவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த (சா) விடைத்தாள் கொழும்பு அனுப்பப்பட்டன

### பணிப்பாளரும் உடன் சென்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நடை பெற்ற க. பொ. த. (சாதா ரண) தரப் பரீட்சை விடைத் தாள்கள் நேற்று பன்னிரண் டரை மணிக்கு கொழும்புக்கு அனுப்பப்பட்டன. கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கமும் அவற்றுடன் பயணமானார். விடைத்தாள்களைக் கிழக்கு மாகாணத்திலேயே திருத் துவதா அல்லது கொழும்பில் வைத்துத் திருத்துவதா என்ற தீர்மானம் இன்னும் எடுக் கப்படவில்லை. கொழும்பில் இடம்பெறவிருக்கும் ஒரு கலந் துரையாடலின் பின்பே இது தீர்மானிக்கப்படும் என்றார். இந்த விடைத்தாள்கள் கிழ

(4ஆம் பக்கம் பார்க்க)

## தாதிகள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள அரசின் வைத்தியசாலைகளில் கடமை யாற்றும் தாதிகளுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் நாளை யாழ் தாதியர் பயிற்சிக் கல்லூரி யில் நடைபெறும்.

இப் பரீட்சைக்கான வினாத்தாள்கள், அனுமதி அட்டைகள் எற்கனவே வந்து சேர்ந்துள்ளன

## நகைகள், சைக்கிள் திருட்டை தடுக்ககாவல்துறைநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யுத்த சூழ்நிலையைச் சாத கமாகப் பயன்படுத்தி துவிச் சக்கர வண்டிகளைத் திருடிய திருடர்களை தமிழீழ காவல் துறையின் புலனாய்வுப் பிரிவு கைது செய்து விசாரணையுடன் பல துவிச்சக்கர வண்டிகளை யும் கைப்பற்றி உள்ளதாக தமிழீழ காவல்துறை நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் பொதுமக்களிடமிருந்து களவா டப்பட்ட துவிச்சக்கர வண்டி கள் தொடர்பான விபரங் களை யாழ். கச்சேரிக்கு முன்பாக உள்ள தமிழீழ காவல் துறையின் புலனாய் வுப் பிரிவினரிடம் சமர்ப்பிக் கும்படியும் வேண்டி உள்ள னர்.

மேலும் காவல்துறையினர் மேற்கொண்டுவரும் இன்னும் சில நடவடிக்கைகள் சம்பந்த மாக எமது மக்களை களவு களிலிருந்தும் சமூகவிரோத சக்திகளிடமிருந்தும் பாதுகாப் பதற்காக காவல் துறையின்

(4ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்
யாழ்ப்பாணக் கிளை

## பத்திரிகை எழுத்தாளர் [Journalist] பயிற்சி

மேற்படி பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆகக் குறைந்த தகைமை: க. பொ. த. (சாதாரண) தரத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் திறமைச் சித்தியுட்பட ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும், வகுப்புக்கள் கட்டணம் ஏதும் இன்றி வார இறுதி நாட்களில் நடைபெறும். தேர்ந்தெடுப்பதற்கான எழுத்துப் பரீட்சை 28 12.1991 பிற்பகல் 1.30 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப் படமாட்டாது.

73, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.
20.12.1991

கௌரவ செயலாளர்
இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்
யாழ்ப்பாணக் கிளை.
(B/3674)


## வரி விளம்பரம்


**ஆண்டு 8 - ஆண்டு 11**
கணித ஆசிரிய ஆலோசகர், பட்டதாரி, பயிற்றப்பட்ட யாழ். நகரின் பிரபல கல்லூரி ஆசிரியர்களால் கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி வகுப்புக்கள் ஆரம்பம் 1992-01-01, இடம் 42/6, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை, ம. கஜேந்திரன் ஆசிரியர் மாதமொரு பரீட்சை; வகுப்பொன்றில் 32 மாணவர்கள். தேர்ச்சி அறிக்கையுடன் வரவும். (R/2019)

**கல்வி**
புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து G. C. E. (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு குறைந்த காலத்தில் கற்பிக்கப்படும். ஆறுமுக நாவலர் 10, சுகசேவி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீடு, சுண்டிக்குளி. (R/2022)


## விடுதலைப் போராட்டம்


ஸ்ரீதர் திரையரங்கில்
அல்ஜீரிய நாட்டு
**விடுதலைப் போராட்டம்**
[தமிழாக்கம் செய்யப்பட்டது]
தினசரி 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்
காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன
(B/3669)


## விழுதெறிந்த ஓராண்டில்..



விதையாக 1972 - 03 - 28

முளையாக 1990 - 12 - 22

### வீரவேங்கை ஸ்ராலின்
(துரைரட்ணம் பகீரதன்)

உன்னை நினைக்கையிலே ...
பாசம் என்னும் தீ
நெஞ்சை ரணமாக்குதடா!
நாட்டுக்காக பாசத்தை துறந்தவன் நீ!
சுட்டுவனில் மார்பில் விழுப்புண் ஏந்தியவன்
உனது லட்சியம் வெல்லும் நிச்சயம்

அரியாலை,
யாழ்ப்பாணம்.

(R/2017)

பெற்றோர், சகோதார்,
உறவினர்.


யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக
அனுமதிகள்
1991/92 ஆம்
கல்வி ஆண்டு

1990 ஆகஸ்ட், 1991ஏப்ரல் (விசேடபரீட்சை)இல் நடைபெற்ற க. பொ. த (உயர்தர) பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத்தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் கோரப்படுகின்றன.


1991 ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ. த [உயர்தர] விசேட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மொத்தத் திரட்டுப் புள்ளி விப


## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 12 - 22



கப்டன் ஆஷா



ஸ்ராலின்

1984 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தொண்டமானாற்றைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியரான தமிழ்ப்பொதுமகன்

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு, வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

யோகன்/சரத் (செபஸ்தியான் யோகராசா-வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

இதே சம்பவத்தின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

ஈசன் (சாமித்தம்பி இரத்தினசிங்கம்-வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு கோண்டாவில், சுவரைக்காய் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய


லெப். குமார் (பொன்னையா சிவகுமார்- கோண்டாவில் வடக்கு)

இதே பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின் போது காயமுற்ற நிலையில் சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

சிவா (செல்லநாயகம் சிவகுமார்-வீரபத்திரர்வீதி, கோண்டாவில் வடக்கு)

1988 ஆம் ஆண்டு பளைச்சோலையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 27வது பிறந்த தினமும்

| வீரஜனனம் | | வீரமரணம் |
|---|---|---|
| 22 | | 28 |
| 12 |  | 02 |
| 1965 | | 1987 |

கட்டுவன் தாக்குதலில் வீரமரணமடைந்த

## வீரவேங்கை நெல்சன்
## (கணபதிப்பிள்ளை பாலகுமார்)

அன்பு என்னும் சோலையில் அரும்பிவிட்ட
வீரவேங்கை
அண்ணன் என அழைக்கும் வேளையிலே அண்ணன்
வழி சென்றவனே
அன்னியர் ஆக்கிரமிப்பு கட்டுவனில் வந்த போது
அண்ணன் இட்ட கட்டளையை தலையாய்க்
கொண்டவனே
அன்னியரை அடித்து விரட்டி ஓட வைத்து விட்டு
அன்னியரின் குண்டை நெஞ்சினிலே ஏந்தி
சென்றனையோ

இன்று மறைந்தவன் அல்ல, மண்ணை மீட்கும் புரட்சிப் பூ!

உன்பிரிவால் வாடும்.

"பாலகுமார் வீதி" அப்பா, அம்மா, அண்ணன்மார்
சிறுவிளான் தங்கை உறவினர் நண்பர்கள்.
இளவாலை.

(R/2010)

---

[உயர்தர] விசேட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மொத்தத் திரட்டுப் புள்ளி விபரம் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டதன் பின்பு அவர்கள் யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ரூபா 50/- இனை யாழ். பல்கலைக்கழக நிதியாளர் அலுவலகத்திலோ அல்லது இலங்கை வங்கியின் ஏதாவதொரு கிளையிலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை யாழ். பல்கலைக்கழக சேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

காசுக் கட்டளையோ அல்லது தபால் கட்டளையோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழக சேர்வுகளும் அனுமதிகளும் கிளையிலிருந்து 06-01-1992க்குப் பின்பு பெற்றுக் கொள்ளலாம். நேரடியாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு விண்ணப்பம் அனுப்பியவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

மேற்படி மாணவர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்.

(B/3677) பதிவாளர்

---

சிவா (செல்லநாயகம் சிவகுமார்-வீரபத்திரர்வீதி, கோண்டாவில் வடக்கு)

1988 ஆம் ஆண்டு பனைச்சோலையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

லெப். தவம் (ஞானமுத்து தவராசா- களுவன்கேணி, மட்டக்களப்பு)

[illegible]சேனைத்துறையில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

கப்டன் அன்பு (பத்திநாதர் அமலராஜன்- [illegible], மயிலிட்டி வடக்கு)

மாங்குளத்தில் சடலங்களாகக் கண்டெடுக்கப்பட்ட 3 தமிழ் இளைஞர்கள்
யாழ் திக்கம் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட கரவெட்டி தேவரையாளி வாசியான பனம்பொருள் அபிவிருத்திச்சபை ஊழியர்

1990 ஆம் ஆண்டு கட்டுவனில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

சாம்சன் (செல்வநாயகம் செல்வச்சந்திரன்- ஏழாலை வடக்கு)

ஸ்ராலின் (துரைரட்ணம் பகீரதன் -170/2, கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம்)

அலன் (குருசாமி ஜீவராசா- விசுவமடு, முல்லைத்தீவு)

கப்டன் ஆஷா (பத்மாவதி (கலா) நடராசா- 148, ஜெயவர்த்தனாவீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்)

ரமா (லோகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை- புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

ரதிகலா (சுசந்தினி கனகரட்ணம்- குடத்தனை வடக்கு)

கப்டன் அஜித்தா (சுகுணறாணி கந்தையா- அரசடி, சங்கத்தானை, சாவகச்சேரி)

மாவிட்டபுரத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

2ஆம் லெப். அருண்நேசன் (வல்லிபுரம் பாலேந்திரன்- சரசாலை வடக்கு, சாவகச்சேரி)

மட்டக்களப்பு மகிழடித்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நின்ற தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட ஆரையம்பதி வாசியான தமிழ் வயோதிபர்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/3672) **விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி**

இந்திய-சீன

# எல்லைப்பிரச்சினை தீர்வு சிறப்பு விடயமாக அமையும்

- நரசிம்மராவ்

(டில்லி)

இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையிலான எல்லைப் பிரச்சினையை தீர்ப்பது ஒரு தனிச்சிறப்பான விடயமாக அமையுமென இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் பேசும் போது குறிப்பிட்டார். நாடாளுமன்றத்தில் தாமாகவே முன்வந்து விளக்கமளித்துப் பேசிய அவர் மேலும், கிழை நாடுகளிடையே பதற்ற நிலையைத் தணித்து அச்சமற்றநிலையை உருவாக்க உலகமே முயற்சித்துவரும் இவ்வேளையில் இந்தியாவும், சீனாவும் எல்லைப் பிரச்சினையை தீர்ப்பதில் மனிதாபிமான அடிப்படையில் இந்தச் சாதனையை எட்டும் எனக் குறிப்பிட்டார்.

இந்தியப் பிரதமர் நேற்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த ஒன்பது பக்க அறிக்கையில் காரகஸ்ஸில் நடைபெற்ற 15 நாடுகளின் தலைவர்கள் மாநாடு ஹராரேயில் நடைபெற்ற அரசுத் தலைவர் மாநாடு, நேபாள பிரதமரின் இந்திய விஜயம் என்பன பற்றியும் விளக்கமாகக் குறிப்பிட்டார்.

# கர்நாடக வன்முறை திட்டமிட்ட செயல்

—ஜெயலலிதா

(சென்னை)

"கர்நாடகத்தில் கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற வன்முறை அமைப்பு ரீதியாக திட்டமிடப்பட்ட ஒன்றாகும்" என தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

அங்கு வசித்த 15,000 க்கு மேற்பட்ட தமிழர்கள் சொத்துகளை இழந்து தமிழ்நாட்டில் அகதிகளாக வந்துள்ளனர்.

இது குறித்து எந்தவொரு தேசியத் தலைவராவது இவ் வன்முறைகளை கண்டிக்கவில்லை. இது மிகவும் வருந்தத் தக்கதொன்றாகும் என அவர் தெரிவித்தார்.

## கட்டுப்பாட்டு

மண்ணெண்ணெய்க்கான ஆகக் கூடிய சில்லறை விலை லீற்றர் 38 ரூபா எனத் தீர்மானிக்கப்பட்டதும் தெரிந்ததே. நேற்று முதல் புதிய விலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வீதியோர மண்ணெண்ணெய் வியாபாரிகள் தாம் இதுவரை விற்றுவந்த மண்ணெண்ணெய் வியாபாரத்தை நேற்று திடீரென நிறுத்திக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து யாழ் செயலக அதிகாரி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் கொழும்பு சென்று மண்ணெண்ணெயைப் பெறும் உத்தரவு பெற்ற வியாபாரிகளும் கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றை 38 ரூபாவிற்கு விற்றல் வேண்டும் எனவும் சில்லறை வியாபாரிகள் தமது கொள்விலைக்கு ஏற்ப விற்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய

பந்தம் என்பவற்றை பரஸ்பரம் பகிர்ந்துகொள்வதுடன், பயங்கரவாதத்தைத் தடைசெய்யவும் ஐக்கிய நாடுகள் உதவ வேண்டுமென்றார்.

சார்க் மாநாட்டில் இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் பேசுகையில் பிராந்திய கூட்டுறவுப் பொருளாதார பாதுகாப்பு, கூட்டு நடவடிக்கை, நெருங்கிய ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பரம் நம்பிக்கை வேண்டும். இதன்மூலம் அரசாங்கங்களுக்கிடையே புரிந்துணர்வு வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## தொண்டாவிற்கு

இதேவேளை இனப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் அரசியல் தீர்வொன்றைக் காணும் வகையில் அமைச்சர் எஸ். தொண்டமான் முன்வைத்த திட்டம் பற்றிச் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதிருப்தியாளர் கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இதுவரை உத்தியோகபூர்வமான கருத்து எதுவும் வெளியிடவில்லை. அவை மௌனம் சாதித்து வருகின்றன என்று பி.பி.ஸி. சிங்களச்சேவை அறிவித்தது.

## ஒத்துழைப்பு

தில் வர்த்தகப் போக்குவரத்தை தாராளமாக்க சார்க் தலைவர்கள் உறுதி பூண்டுள்ளனர்

சுற்றுப்புறச் சூழல் பற்றிக் குறிப்பிடுகையில், வளரும் நாடுகளுக்குப் பொருந்தக் கூடிய சுற்றுப்புறச் சூழல் பரப்பல் தேவையற்ற பொருளாதாரச் செலவுகளையும், சமூகத் தடைகளையும் மிஞ்சியிருக்கக் கூடுமென்று அவர்கள் தெரிவித்தார்கள். பாதகமற்ற சுற்றுப்புறச் சூழல் மற்றும் அபிவிருத்தியை வளரும் நாடுகள் பின்பற்றுவதற்கு கூடிய உணவுசதி தேவைப்படும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

பிராந்தியத்தில் பயங்கரவாதம் பரவிவருவது உறுப்பு நாடுகளின் பாதுகாப்பையும் உறுதிப் பாட்டையும் பாதிப்பது குறித்து தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

போதை வஸ்து கடத்தல், தவறுமுறையில் உபயோகித்தல் என்பவற்றை எதிர்ப்பதில் பிராந்திய நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு அதிகரிப்பது குறித்துத் திருப்தி தெரிவிக்கப்பட்டது.

சார்க் நிதியம் ஒன்று அமைக்கப்படுவதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

மேலும் சார்க் மாநாட்டில் உரை நிகழ்த்திய தலைவர்கள் தத்தமது நாடுகளுக்கு ஏற்ற வகையில் தமது கருத்துக்களை வெளியிட்டனர்

## க. பொ. த.

க்கு மாகாணத்து விடைத்தாள்களை டக்கிலும், வடக்கு விடைத்தாள்களைக் கிழக்கிலும் திருத்துவதற்கு ஏற்கனவே ஒருதிட்டம் இருந்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது

## பாடசாலை ஆரம்பம்

மேலும் அவர் அடுத்த வருடம் ஆறாம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகும் என்று மாணவர்களுக்கு அறிவித்துள்ளார். அத்துடன் வட இலங்கை மகிழ்ப் பரீட்சைகள் எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர், இந்துக்கல்லூரிகளில் நடைபெறும் என்றும் அறிவித்தார். (லோ)

## நகைகள்

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கீழ்வரும் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

★ நகைகளை விற்க வருபவர்களிடம் தகுந்த ஆதாரங்கள், அறிமுக விபரங்களை பெற்ற பின்னர் நகைக் கடைக்காரர்கள் நகைகளை வாங்கவும்.

★ நகைக்கடை உரிமையாளர்கள் தமக்கு நகை விற்பவர்கள் பற்றிய விபரங்கள் அடையாளங்களை இரு வாரங்களுக்கொருமுறை தமிழீழ காவல்துறை புலனாய்வுப் பணிமனைக்கு அறிவிக்கவேண்டும்.

★ வாங்கிய நகைகளை குறைந்தது ஒரு மாதமாவது தமது கடைகளில் வைத்திருத்தல் வேண்டும்.

★ துவிச்சக்கர வண்டிகளை இரண்டாம் தரமாக வாங்குவோர் அண்மையில் உள்ள காவல்துறை பணிமனைக்கு அறிவித்து விற்பனையாளர் அடையாளங்களை நிரூபித்த பின்னர் துவிச்சக்கர வண்டிகளை வாங்கவும்.

★ துவிச்சக்கர வண்டிகளை பாதுகாப்பிடங்களில் பூட்டி வைக்கவும்.

★ துவிச்சக்கர வண்டிகளைப் பாவிப்போர் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் செயற்படவும்.

★ தமது துவிச்சக்கரவண்டிகளை இருடனிடம் பறிகொடுத்தோர் உடனடியாக சகல விபரங்களையும் தமது காவல்துறை பணிமனைக்கு அறிவிக்குமாறும் தமிழீழ காவல்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# இல. மீன்பிடி படகுகளை இந்திய கடற்படை பிடித்தது

(சென்னை)

இலங்கையைச் சேர்ந்த இரண்டு மீன்பிடிப் படகுகளை நேற்று இந்தியக் கடலோரக் காவற் படையினர் பிடித்தனர். படகுகளிலிருந்த ஒன்பது பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

இந்தியக் கடலோரக் காவற்படையினர் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் இருந்ததால் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது.

தூத்துக்குடிப் பொலிசாரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கன்னியாகுமரிக் கடலில் தடைசெய்யப்பட்ட கடற் பிரதேசத்தில் இவர்கள் மீன்பிடித்ததாக கடலோரக் காவற் படையினர் தெரிவிக்கின்றனர்.

## பன்றி தாக்கி

சி. கந்தையா (வயது70) என்பவர் வயலுக்கு சென்றபோது வழியில் குறுக்கிட்ட பன்றியொன்று அவரைக் கடுமையாகத்தாக்கியது உடல் முழுவதும் கடுகாயமடைந்து குடல் வெளியேறிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவரது இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டுள்ளது. (ச)

## 23ஆம் திகதி

ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலில் ஒவ்வொரு நிறுவனங்களை சேர்ந்தவர்களும் தமது கருத்துகளையும் சுகாதாரம் பேணுவது தொடர்பாக தாம் முன் வைக்கும் திட்டங்களையும் பற்றி எடுத்துக் கூறினார்.

## சூழல் சுகாதார வாரம்

23-12-91 தொடக்கம் 29-12-91 வரை தமிழீழ மக்கள் தமது சுற்றுச் சூழலை துப்புரவாக்கி கழிவுப் பொருட்களை அகற்றி நோய்களை உருவாக்கும் ஈ, நுளம்பு வகைகளை அழித்தொழிக்க அனைவரையும் முன்வருமாறு கோரும் சுகாதார வாரமொன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தி உள்ளனர். இதையிட்டு ஒரு பிரசுரமும் வெளியிடப்பட்டுள்ளது.

## குழு தெரிவு

நேற்று நடைபெற்ற இந்த கலந்துரையாடலை தொடர்ந்து எதிர்வரும் சூழல் சுகாதார வாரத்தை இட்டு மக்கள் எந்தவகை நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்பதை தீர்மானிக்கும் வகையில் ஒரு குழு தெரிவு செய்யப்பட்டது. இந்தக் குழு தீட்டும் திட்டம் விரைவில் மக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும், இதற்கமைய மக்கள் சுகாதார வாரத்தை அமுல் படுத்த வேண்டும் என்றும், அக்கூட்டத்தில் ஒவ்வொரு அதிகாரிகளாலும் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்குழுவில் ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் சங்கங்களிலிருந்தும், அமைப்புகளில் இருந்தும் ஒவ்வொரு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

---

31 ஆம் நாள்

## கண்ணீர் அஞ்சலி



வீர ஜனனம் 28 - 06 - 1976

வீர மரணம் 22 - 11 - 1991

### வீரவேங்கை புலேந்திரன்

[கார்த்திகேசு சசிகரன்]

(ஆனையிறவு இராணுவ நேரடி மோதலில் வீர மரணத்தைத் தழுவினார்)

அன்பின் கடலாய் இணை பிரியாப் பந்தமாய்
எம் அனைவருடன் இணைந்து
திடீரென இறைவனடி சேர்ந்தாயே
ஆத்மா சாந்தி அடைக.

சரம்பக் குறிச்சி, வரணி. — குடும்பத்தினர்

(B/3643)

---

90 ஆம் நாள்

## வீர அஞ்சலி



### 2-ம் லெப்டினனட் - சுபீர்

(இளங்குட்டி)

(ஆனந்தராஜ் - வினோதரராஜ்)

தாயக மண்ணில்: 25-05-1974

தாயக மீட்பில்: 22-09-1991

அனலாற்றில் நீந்திப் பாடினாய்
-புலிக்குட்டி
ஆடிப் பெரும் போரில் ஆடினாய்
மணலாற்றில் மாவீரன் ஆகினாய்
-இளங்குட்டி
மரணத்தை வென்றிங்கு வாழ்கிறாய்
பூமேனி சாவோடு போனதே
-உந்தன்
புலிவீரம் வரலாறாய் ஆனதே
தாய்மானம் காத்திட்ட வேங்கையே
-நீ
தமிழுள்ள வரையிங்கு தூங்குவாய்!

பிரிவால் துயரும்
156 ஆம் கட்டை, குடும்பத்தினர்
கண்டி றோட், உற்றார், உறவினர்கள்.
கிளிநொச்சி. நண்பர்கள்

(B/ 3675)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது